<u>**Sub Court, Eraniel**</u>

**O.S. No.40/2018**
Date: 25.08.2025.
வா.சா.1 - திருமதி.மேரி செலின்
சாட்சி சத்தியபிரமாணத்தின் பேரில் விசாரிக்கப்பட்டார்.

<u>4ம் பிரதிவாதி தரப்பில் குறுக்கு விசாரணை</u>

எனது சகோதரன் போலி ஆவணம் எழுதிக்கொடுத்தது சம்பந்தமாக பரிகாரம் கோரி இந்த வழக்கை நான் தாக்கல் செய்திருக்கிறேன். வழக்கு சொத்தின் சர்வே எண்,322/13, 342/1, 345/1. அதன் மொத்த விஸ்தீரணம் 1 ஏக்கர்/100 சென்ட். வழக்கு சொத்துகளை 4ம் பிரதிவாதி ஸ்ரீதேவியை தவிர மரிய அந்தோணி, ஜெயசந்திரன், ஜெயசேகரன், பால்ராஜ், ஆகியோர் விலைக்கு வாங்கியிருக்கிறார்கள். அவ்வாறு விலைக்கு வாங்கியவர்கள் பற்றிய விபரம் என்க்கு தெரியும் என்றால், சரிதான். ஆனால் அவர்களை நான் இந்த வழக்கில் கட்சியாக சேர்க்கவில்லை என்றால், சரியல்ல, சேர்த்திருக்கிறோம்., அஸ்வினி குமார், அஸ்வந்குமார், மரிய அந்தோணி, ஜெயசந்திரன், ஜெயசேகரன்., ஸ்ரீதேவி, ஆகீயோரை கட்சியாக சேர்த்திருக்கிறேன். நான் இந்த வழக்கில் விலைக்கு வாங்கிய நபர்களில் 1 மற்றும் 4ம் பிரதிவாதிகளை தவிர மற்றவர்களை கட்சி சேர்க்கவில்லை என்றால், சரியல்ல. இந்த வழக்கு சொத்து சம்பந்மாக வேறு நீதிமன்றத்தில் , இரணியல் கூடுதல் உரிமையியல் நீதிமன்றத்தில் அ.வ.எண்.143/2013 வழக்கு தாக்கல் செய்திருக்கிறேன். அந்த வழக்கிலும் 1 மற்றும் 4ம் பிரதிவாதிகளை தரப்பினராக சேர்க்கவில்லை என்றால், சரிதான். அதற்கு பிறகு வழக்கு போட்டிருக்கிறேன். அ.வ.எண்.143/2013 வழக்கு நான் சரியாக நடத்தவில்லை என்று, எனக்கெதிராக 19.12.2022 ல்

தள்ளுடிபயாகிவிட்டது என்றால், சரிதான். அதற்குமேல் நடவடிக்கை எடுத்திருக்கிறேன். அந்த வழக்கை மீண்டும் கோப்பில் எடுக்க நடவடிக்கை எடுக்காமல் , புதிதாக இந்த வழக்கை தாக்கல் செய்துள்ளேன் என்றால், வழக்கறிஞரிடம் அதுபற்றி நடவடிக்கை எடுக்க சொல்லியிருக்கிறேன். நான் வழக்கு சொத்தினை விலைக்கு எழுதிக்கொடுத்தது பற்றி 2011 ம் ஆண்டு தான் எனக்கு தெரியும் என்று உண்மைக்கு புறம்பாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால், சரியல்ல. தற்போது என்னிடம் காட்டப்படும் இந்த வழக்கில் நான் தாக்கல் செய்துள்ள வா.சா.ஆ–1 இஷ்டதான பத்திரத்தின் சான்றிட்ட நகல் பெற்ற தேதி 14.10.1999 ஆகும். இதனை நான் 14.10.1999 ல் வாங்கியிருக்கிறேன் என்றால், சரிதான். நான் எனது அண்ணன் ஜோசப்பிற்கு வா.சா.ஆ–2 கிரைய ஆவணத்தை 1992 ல் எழுதிக்கொடுத்துவிட்டு தற்போது அதனை மறுத்து அதுபற்றி தெரியாது என்று உண்மைக்கு புறம்பாக வழக்கு செய்கிறேன் என்றால், சரியல்ல. நான் வா.சா.ஆ–1 மற்றும் 2 ஆவணங்களை 14.10.1999 ல் சான்றிட்ட நகல்கள் பெற்றுள்ள நிலையில், தவறதலாக அவற்றைப்பற்றி 2011 ல் தான் தெரியும் என்று சாட்சியம் அளிக்கிறேன் என்றால், சரியல்ல. 13.06.1984 ல் எனது தாயார் எனக்கு எழுதிக்கொடுத்த இஷ்டதான பத்திரம் தொலைந்துவிட்டதாக தவறுதலாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால், சரியல்ல. நான் எனது அண்ணனுக்கு கிரைய எழுதிக்கொடுத்து அசல் ஆவணங்களை கொடுத்துவிட்டு தற்போது தொலைந்துவிட்டதா தவறதலாக வழக்கு செய்கிறேன் என்றால், சரியல்ல. அ.வ.எண்.143/2013 வழக்கிலும் அசல் ஆவணங்களை நான் தாக்கல் செய்யாத காணரத்தினால் தான் வழக்கு தள்ளுபடி செய்யப்பட்டது என்றால், சரியல்ல. 14 சென்டு சொத்தினை அஸ்வினி குமாரி வேறு

நபர்களுக்கு விற்பனை செய்துள்ளார், அவர்களை நான் இந்த வழக்கில் கட்சியாக சேர்த்திருக்கிறேன். அவர்கள் பெயர் ஜெயசேகரன், ஸ்ரீதேவி. 14 சென்டு சொத்தினை பால்ராஜ் மற்றும் மற்றொரு நபருக்கு கொடுத்திருக்கிறார் என்று சாட்சி கூறுகிறார். அவர்களை இந்த வழக்கில் கட்சி சேர்க்கவில்லை என்றால், சரிதான். ஸ்ரீதேவியின், கணவர் வழக்கு நிலுவையில் இருக்கும் போது இரசியமாக தனது மனைவி ஸ்ரீதேவிக்கு பஞ்சாயத்து அனுமதி வாங்க எழுதிக்கொடுத்தன் காரணமாக 4ம் பிரதிவாதி ஸ்ரீதேவியை இந்த வழக்கில் கட்சியாக சேர்த்திருக்கிறேன். அவ்வாறு வழக்கிற்காக நான் தவறுதலாக குறிப்பிடுகிறேன் என்றால், சரியல்ல. 4ம் பிரதிவாதி ஸ்ரீதேவிக்கு எதிராக நான் பரிகாரம் கோரவில்லை என்றால், ஜெயசேகரன் மாற்றி எழுதியது செல்லாது. இந்த வழக்கை காலதாமதமாக தாக்கல் செய்திருக்கிறேன் என்றாலும், 4ம் பிரதிவாதி இந்த வழக்கில் தேவையற்ற தரப்பினர் என்றாலும், சரியல்ல.

திறந்த நீதிமன்றத்தில் சாட்சி சொல்ல சொல்ல என்னால் தட்டச்சருக்கு சொல்லப்பட்டு அவரால் தட்டச்சு செய்யப்பட்டு சாட்சி படித்து பார்த்து சரியென ஒப்புக்கொண்டு என் முன்னிலையில் கையெழுத்துச் செய்தார்.

சார்பு நீதிபதி,
இரணியல்.